பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 26 புதன்கிழமை 11.12.2024 கதிர் 034

### இனிது ரகசியம் அல்ல!

ஆளும் தரப்பு தனது புதிய அரசமைப்பு முயற்சியைத் தொடங்கும்போது தமிழர் தரப்பில் அங்கு முன்வைக்கப்படும் தீர்வுத் திட்டம் தொடர்பாக ☞ 2

## யாழ். போதனா வைத்தியசாலையில் குழப்பம் ஏற்படுத்த அனுமதி இல்லை

### அருச்சுனா எம்.பியின் தலையீடு குறித்து பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் குழப்பம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளும் எவரையும் அனுமதிக்க முடியாது என யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள்நுழைந்து நாடாளுமன்ற உறுப்பினரான தன்னை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ''சேர்'' என்றுதான் அழைக்கவேண்டும் என்று பணிப்பாளருடன் அடாவடித்தனத்தில் ஈடுபட்டார் அருச்சுனா. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தார் பணிப்பாளர் சத்தியமூர்த்து. இந்தச் சம்பவம் தொடர்பில் விளக்கம் அளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் நுழைய முயன்ற நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தருடன் முரண்பட்ட பின்னரே பணிப்பாளரின் அலுவலகத்தற்குள் வலுக்கட்டாயமாக உள்நுழைந்தார் என்று வைத்தியசாலைத் ☞ 2

## உணவுக் கொள்கை, பாதுகாப்புக்கு தனிக் குழு நியமிக்கிறார் ஜனாதிபதி

சகலருக்கும் குறைற்தபட்ச உணவுத்தேவையைபோதியளவிலும் தரமாகவும் தாங்கிக்கொள்ள கூடிய விலையிலும் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் உணவுக்கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவை, ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் நியமிப்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க சமர்பித்தயோசனைக்குஅமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. தேசிய உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் பாதுகாப்பான முறையில் உணவு பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின்முதன்மைபணியாகும் என்ற வகையில் இந்த அனுமதி வழங்கப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்துக்கு அமைய,

– நாட்டுக்குள் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்து உணவு வகைகளையும் உள்நாட்டில் உற்பத்தி செய்தல்.

–குறைந்தபட்சம் 3 மாதங்களுக்கு போதிய உணவு தொகை இருப்பை உறுதிப்படுத்தல்.

–நாட்டிலுள்ள உணவுத் தொகை தொடர்பில்தகவல்கட்டமைப்பொன்றை நடத்திச் செல்லல். ☞ 8

## 6 மாதங்களுக்குப் பின்பு மின் கட்டணக் குறைப்பு

### ஆளும்தரப்பு கொள்கை மாறவில்லையாம்

மின் கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைக்கமுடியும்என்றஎமதுநிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை. எதிர்வரும் 6 மாதங்களுக்கு மின் கட்டணத்தை அதிகரிக்காமல் இருப்பதற்கானநடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளை, அதன் பின்னர் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் வகையில் கட்டண திருத்தம் ☞ 8

# இந்தியாவுடன் முக்கிய பேச்சு அநுரவின் பயணத்தின்போது

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் 3 நாட்கள் உத்தியோகபூர்வ இந்திய விஜயத்தின் போது முக்கிய இருதரப்பு பேச்சு இடம்பெறவுள்ளன என்று ஆளும்தரப்புத் தெரிவித்துள்ளது.

பேச்சுக்களின் போது அவதானம் செலுத்தப்படும் விடயங்கள், எட்டப்படும் இணக்கப்பாடுகள் குறித்து டில்லியிலிருந்து கூட்டு அறிவித்தல் வெளியிடப்படும் என்று ஆளும்தரப்புத் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பின்போது ஜனாதிபதியின் இந்திய விவகாரம் தொடர்பில் கேள்விஎழுப்பிய போது, அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க டிசெம்பர்15அன்றுஇந்தியாபுறப்படுகின்றார்.3 நாட்கள்கொண்டஇந்தப்பயணத்தில்அவருடன் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் பிரதி நிதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும உள்ளிட்டோரும் இணையவுள்ளனர்.

ஜனாதிபதி தலைமையிலான இந்த உயர்மட்ட தூதுக்குழு இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி திரௌபதி முர்மு உள்ளிட்ட முக்கிய தலைவர்களைச் சந்தித்து இருதரப்பு பேச்சுக்களில் ஈடுபடவுள்ளது. ☞ 2

### எல்லை தாண்டி மீன்பிடித்த

## 18 இந்திய மீனவர் நேற்று நிபந்தனையுடன் விடுவிப்பு

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 18 இந்திய மீனவரும் நேற்று பருத்தி துறை நீதிமன்றத்தினால் நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர். ☞ 2

### ஊழல் குற்றச்சாட்டுக்கள் காரணமாக

## இலங்கையர் இருவருக்கு அமெரிக்கா தடை விதிப்பு

ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனத்தின்முன்னாள்பிரதமநிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன, ரஷ்யாவிற்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க மற்றும் அவர்களின் நெருங்கிய ☞ 8

## மீண்டும் தமிழ் கூட்டமைப்பாக செயற்படுவது குறித்து பேச்சாம்

மீண்டும்தமிழ்தேசியகூட்டமைப்பாகச் செயற்படலாமா என்பது தொடர்பில் பேசிக்கொண்டிருப்பதாக வன்னிப் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து பெறப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் தெரிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு நேற்று வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாருடன் கலந்துரையாடல்ஒன்றைநடத்துவதற்கு தீர்மானித்திருக்கிறோம். எமது நாடாளுமன்றக் குழுவில் ஒரு ஒற்றுமை வேண்டும் ☞ 8



## குடாநாட்டில் திடீர் காய்ச்சல் விளக்கம் கேட்கும் ஆளுநர்

யாழ்ப்பாணமாவட்டத்தில் கடந்த சில நாள்களில் 4 பேர் திடீர் காய்ச்சல் காரணமாக உயிரிழந்தமை தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் விளக்கம் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரனுடன் நேற்று மாலை தொலைபேசியில்உரையாடிய அவர் இறப்புக்களுக்கான காரணம் குறித்துக் கேட்டார்.

கடந்த சில தினங்களில் வடமராட்சியைச் சேர்ந்த 4 பேர் காய்ச்சல் காரணமாக திடீரென உயிரிழந்துள்ளனர். இது தொடர்பாகவே ஆளுநர் விளக்கம் கேட்டுள்ளார்.

இவர்களின் உயிரிழப்புக்கான காரணம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றதாகத் தெரிவித்த பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர், எலிக் ☞ 2

## ஓரிரு நாள்களில் அரிசி வந்துசேரும்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி தொகை ஓரிரு நாட்களுக்குள் நாட்டை வந்தடையும். நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைக்கு அமைவாகவே அரிசி சந்தைக்கு விநியோகிக்கப்பட வேண்டும் என வர்த்தகம், வாணிபம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானிக்கு அமைவாகவே அரிசி உற்பத்தியாளர்கள் விற்பனை நடவடிக்கைகளில்ஈடுபடவேண்டும். ☞ 2

## மனித உரிமைகள் தினத்தில் கொழும்பிலும் கவனவீர்ப்பு

### வடக்கு கிழக்கின் பல இடங்களிலும் போராட்டம்

இதேவேளை கொழும்பில் சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்ட வடக்கு - தெற்கு சகோதரத்துவம் அமைப்பினர், பயங்கரவாதத்தடைச்சட்டம் உள்ளிட்ட ஒடுக்குமுறை சட்டங்கள் உடனடியாக நீக்கப்படவேண்டும் என வலியுறுத்தினர்.

வடக்கு - தெற்கு சகோதரத்துவம் எனும் அமைப்பினால் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை ☞ 2

## திடீர்க் காய்ச்சலால் வடக்கில் ஐவர் சாவு

திடீர் காய்ச்சல் காரணமாக வடக்கில் கடந்த சில நாள்களில் மட்டும் ஐவர் உயிரிழந்துள்ளனர், இவர்களில் நால்வர் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியானவடமராட்சியைச்சேர்ந்தவர்கள். இதையடுத்து அந்தப் பகுதிகளில் உடனடியாகத் தடுப்பு நடவடிக்கைகள் இன்றுதொடங்கப்படவுள்ளன என்று ☞ 2

## இனி இது .....

நேற்று ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனுடன் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் மற்றும் செயலாளர் கஜேந்திரன் ஆகியோர் கிளிநொச்சியில் சந்தித்துப் பேசினர்.

சுருக்கமாகச் சொன்னால் அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தை முழுமையாக ஏற்றுக்கொண்ட தரப்பைச் சேர்ந்த செல்வத்தை 13ஐ ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாத, அதை ஏற்றுக்கொண்ட செல்வம் மற்றும் தமிழ் அரசுக் கட்சி போன்ற துரோகிகளுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கக்கூடாது என்று கூறிய கஜேந்திரகுமாரும் கஜேந்திரனும் சந்தித்துப் பேசினர். இவர்கள் எல்லோர் மீதும் மக்கள் சுழற்றிய சாட்டையின் வீரியம் அது.

நேற்றைய சந்திப்பில் விசேசமாக எந்த முன்னேற்றமும் இல்லை. ஏனெனில் தமிழ் மக்கள் பேரவைக் காலத்தில் விக்னேஸ்வரனால் முன்வைக்கப்பட்ட அரசமைப்பு வரைவை முதன்மைப்படுத்தி அரசின் புதிய அரசமைப்பு முயற்சிகளை எதிர்கொள்ளவேண்டும், அதன் மூலம் அந்த வரைபைத் தயாரித்தவர்கள் என்று தம்மை முதன்மைப்படுத்தி அரசியலில் நகராலம் என்பது கஜேந்திரன்களின் உள்நோக்கம். செல்வத்தாருக்கோ பொதுத் தேர்தலில் வாங்கிய அடியிலிருந்து மீண்டு வருவதற்கு கஜேந்திரன்களையும் பயன்படுத்திக்கொண்டு மீண்டும் தேர்தலில் கூட்டமைப்பாகப் போட்டியிடுவதற்கு அவர்களை இழுப்பது நோக்கம். அதனால் பேச்சுக்கள் எதிர்பார்த்தபடி இல்லை என்கின்றன தகவல்கள்.

விக்னேஸ்வரன் வெளியிட்ட அரசமைப்பு வரைவை செல்வத்திடம் கஜேந்திரகுமார் வழங்கியதுடன், தை பிறந்ததும் (வழி பிறக்குமா என்று பார்க்க) மீண்டும் கூடிப் பேசுவது என்று தீர்மானித்ததையும் தவிர பேச்சில் உருப்படியான விடயங்கள் எவையும் எட்டப்படவில்லை என்பதை உறுதிப்படுத்த முடிந்தது. இந்தப் பேச்சுக்கள் ஒரு கட்டத்திற்கு மேல் ஆக்கபூர்வமாகப் பயணிக்கும் என்கிற நம்பிக்கை எனக்கில்லை. எல்லோரும் முகத்திற்கு நேரே சிரித்துச் சிரித்துப் பேசினாலும் பின்னால் என்ன பேசுகிறார்கள் என்பது பத்திரிகையாளர்களான எமக்குத்தான் தெரியும்.

அந்த வகையில் தாம் அழைக்கும் போதெல்லாம் வரமுடியாது என்று நிராகரித்துவிட்டு இப்போது தேர்தலில் அடிவாங்கிய பின்னர் ஒட்டப் பார்க்கிறார்கள் என்பது தமிழ் அரசுக் கட்சிக்கு மற்றைய இரு தரப்பினர் பற்றியும் உள்ள கருத்து. தங்களை ஒருபோதும் முன்னணி ஒரு பொருட்டாக மதித்ததிலலை, இன்று தமக்குத் தேவை என்றதும் வருகிறார்கள் என்பது செல்வத்தாரின் கருத்து. இவற்றை அவர்கள் தமக்கு நெருக்கமானவர்களிடம் வெளிப்படையாகவே பேசுகின்றார்கள். இதனால்தான் கஜேந்திரகுமார் சிறீதரனைச் சந்தித்துப் பேசிய சமயத்திலும் அவர் வழங்கிய அரசமைப்பு வரைவுக்குப் பதிலாக தனது சார்பிலும் ஒரு தீர்வுத் திட்டத்தை சிறீதரன் வழங்கியிருந்தார்.

அடுத்தடுத்த தேர்தல்களை நோக்கிய தேர்தல் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு முன்னணி இணங்கி வராத பட்சத்தில் இந்தப் பேச்சுக்கள் பெரியளவில் முன்னேற்றம் அடையும் சாத்தியங்கள் இல்லை என்பதற்கான அறிகுறிகள் தெளிவாகவே தெரிகின்றன. முன்னணியோ இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி கஜேந்திரகுமாரைத் தமிழர்களின் தலைவர் என்கிற இடத்திற்கு உயர்த்-தும் அரசியல் இலாபத்திற்குக் கணக்குப் போடுவதைத் தவிர்த்து தேர்தல் கூட்டுக்குச் செல்லும் நோக்கத்தில் இப்போதைக்கு இல்லை. கையாலாகத நிலையில் கடைசியில் போனால் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றாலும் இப்போதைக்கு அதற்கு அந்த எண்ணமில்லை. ரெலோவுக்கோ அது மட்டுமே எண்ணம். தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தவரை தனித்து நின்று வென்ற பிறகு நீங்கள் விரும்பினால் வரலாம், ஆனால் நிபந்தனைகளோடு வராதீர்கள் என்பதுதான் நிலைப்பாடு. இவற்றுக்கு மத்தியில் இந்த முயற்சியின் வெற்றி என்பது கல்லில் நார் உரிக்கும் கதைதான்.

கிளிநொச்சியில் உள்ள முன்னணியின் அலுவலகத்தில் நடந்த நேற்றைய சந்திப்புக் குறித்து கஜேந்திரகுமார் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு புதிய அரசமைப்பை கொண்டு வர உத்தேசித்துள்ள இந்தச் சூழ் நிலையில் அதனை நாடாளுமன்றத்தில் எவ்வாறு எதிர் நோக்கப் போகின்றோம் என்ற விடயம் குறித்தும், குறிப்பாகத் தமிழ் தேசிய மக்களின் நிலைப்பாடுகள் தொடர்பாகவும், புதிய அரசமைப்பு கொண்டுவரப்படுகின்ற சந்தர்ப்பத்திலே எங்களுடைய நிலைப்பாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் கலந்துரையாட இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உள்ளோம்.

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டத்தை மையப்படுத்தி நாங்கள் இக்கலந்துரையாடலை நடத்த வேண்டும் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் கேட்டு இருந்தோம். அந்த வகையில் எமது தீர்வு திட்டத்தில் ஒரு பிரதியையும் வழங்கி மேலதிகமாக புது வருடத்தின் பிற்பாடு, நாங்கள் மீண்டும் கூடி தமிழ் மக்கள் பேரவையின் யோசனைகளை ஆழமாக ஆராய்வதற்கு இனங்கியுள்ளோம் - என்றார்.

மேலதிக சந்திப்புக்களுக்கான வாய்ப்புக்களைத் தக்க வைப்பது தவிர, வேறு எந்தப் பயனையும் முன்னேற்றத்தையும் இந்தச் சந்திப்புக்கள் ஏற்படுத்தவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

..................................................

ரெலோவின் தலைமைக்கு எதிரான கிளர்ச்சியை விந்தனைக் கட்சியை விட்டு வெளியேற்றி அடக்கி விடலாம் என்று தலைவர்கள் நினைத்தது ஏடாகூடமாகி விட்டிருக்கின்றது. கட்சி மீண்டும் பிளவடையும் நிலையை நோக்கி வேகமாக வளர்கின்றது.

30 வருடங்களுக்கும் மேலாக ரெலோவின் தலைமைப் பதவியை ஆக்கிரமித்து வைத்திருந்த போதும் தோல்வியையே தழுவிய இந்தத் தலைமையை மாற்றி புதியவர்களைக் கொண்டுவந்து கட்சிக்கு புத்துயிர் பாய்ச்ச ஆர்வம்கொண்டுள்ள புலம்பெயர் ரெலோ தரப்புக்கள், தற்போதைய தலைவர்களின் சுயநல ஆட்டத்தால் விசனமடைந்து கட்சியைப் பிளப்பதில் தீவிரமாக உள்ளன.

அதனால் தலைமைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்பவர்களை ஒன்று திரட்டி ஜனநாயக ரெலோ என்ற புதிய கட்சியை உருவாக்கும் முயற்சியில் அவை தீவிரம் காட்டி வருகின்றன. அப்படி நடந்தால் ரெலோவிலிருந்து பிரியும் 5ஆவது தரப்பாக இந்தப் புதிய கட்சி அமையும். ஏற்கனவே ரெலோவில் இருந்து சிறீகாந்தா தலைமையில் தமிழ்த் தேசியக் கட்சி பிரிந்தது, அதற்கு முன்னர் சிறீ ரெலோ பிரிந்தது, சிறீசபாரத்தினம் அறக்கட்டளை பிரிந்தது, இப்போது ஐந்தாவதாக ஜனநாயக ரெலோவும் பிரியப் போகிறது.

ஜனநாயகம் செத்துப்போன ரெலோவின் தலைமைக்குக் கீழ் இருப்பதைவிட, இன்னும் ஆயுதக் குழுக்களைப் போல் நினைத்துக்கொண்டு அடக்குமுறையிலும் அடாவடித்தனத்திலும் மிரட்டல்களிலும் ஈடுபடும் தலைமைக்கு முண்டுகொடுப்பதைவிட பிரிந்து சென்று அவர்களுக்குப் பாடம் படிப்பிப்பதே மேல் என்று ரெலோ கிளர்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இந்தத் தடவை வடக்கு கிழக்கில் உள்ள முக்கிய முகங்கள் பலவும் கட்சியைப் பிளந்து ஜனநாயக ரெலோவை உருவாக்குவதில் தீவிரமாக நிற்கின்றன. விரைவில் அது தொடர்பான அறிவிப்புக்களுக்கு அவை தயாராகி வருகின்றன.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## இந்தியாவுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணத்திற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர் வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் உத்தியோகபூர்வ ஊடக அறிவித்தல் வெளியிடப்படும் எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார்.

## திடீர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐந்துநாள் காய்ச்சலினால் பிடிக்கப்பட்டிருந்த ஒரு பிள்ளையின் தாயார் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ள சம்பவம் பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கல்லூரிவீதி, ஓடக்கரை, பருத்தித்துறையைச் சேர்ந்த சுரேஷ்குமார் ரஞ்சிதா (வயது- 33) என்பவரே உயிரிழந்துள்ளார். டிசெம்பர் 6 அவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டது. மூன்று நாள்கள் தொடர்ந்து 'பனடோல்' மருந்து எடுத்தபோதும் காய்ச்சல் நிற்காததை திங்கட்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு காய்ச்சல் தீவிரமாக அவர் மயங்கி உள்ளார். உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட அவர் நேற்று முற்பகல் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இந்த இறப்புத் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை பருத்தித்துறைப் பொலிசார் நெறிப்படுத்தினர்.

இதற்கு முன்னதாக காய்ச்சலின் வீரியம் கூடி இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரும் பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட புலோலி தெற்கு பகுதியில் உயிரிழந்தார். கந்தசாமி சசிகுமார் (வயது- 42 ) என்ற 2 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

இவருக்கு டிசெம்பர் 3 காய்ச்சல் ஏற்பட்டதாகவும் இதனை தொடர்ந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இந்த இறப்புத் தொடர்பாக திங்கட்கிழமை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி அன்ரலா விசாரணைகளை மேற்கொண்டார்.

அன்றைய தினமே கடும் காய்ச்சல் காரணமாக கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட வரணிப் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

வரணி வடக்கு, வரணியைச் சேர்ந்த கோகிலான் தவராசா (வயது- 60) என்ற மூன்று பிள்ளைகளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார். மூச்சுவிட முடியாத நிலையில் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் திங்கட்கிழமை நண்பகல் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

இவர்கள் தவிர நேற்று வரையான காலப் பகுதியில் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர் உட்பட ஐவர் காய்ச்சலால் வடக்கில் உயிரிழந்துள்ளனர்.

## குடாநாட்டில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காய்ச்சல் காரணமாக இந்த இறப்புக்கள் நிகழ்ந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாகத் தெரிவித்தார். அதற்கு அமைவாக தடுப்பு நடவடிக்கைகள் நாளை புதன்கிழமையிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

புலோலி மற்றும் கற்கோவளம் ஆகிய பிரதேசங்கள் மழை வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அந்தப் பகுதியில் முதல் கட்டமாக இந்தத் தடுப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

தொடர் நடவடிக்கைகள் தொடர்பில் தனக்கு அறியத் தருமாறு ஆளுநர் அறுவுறுத்தினார்.

## ஓரிரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் அரிசி இறக்குமதியாளர்களும் இந்தக் கட்டுப்பாட்டு விலைக்கு அமைவாகவே விநியோக நடவடிக்கையில் ஈடுபடவேண்டும்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி தொகை ஓரிரு நாட்களுக்குள் நாட்டை வந்தடையும், துறைமுகத்தில் இருந்து ஓரிரு மணித்தியாலங்களுக்குள் அரிசி தொகையை விடுவிப்பதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என வர்த்தக, வாணிபம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து அனுப்பப்பட்ட 10,000 மெற்றிக் தொன் அடங்கிய கப்பல் அரிசி கொழும்பு துறைமுகத்தை அண்மித்துள்ளதாக அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வாக இந்தியாவில் இருந்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை தற்காலிகமாக இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில், அரிசி இறக்குமதிக்கான வரையறைகளையும் தற்காலிகமாக நீக்கியுள்ளது.

இதற்கமைய சிறிய துறைமுகங்களில் இருந்து பல இறக்குமதியாளர்களால் கொள்வனவு செய்யப்பட்ட செய்யப்பட்ட 20,000 மெட்ரிக் தொன் அரிசி வியாழக்கிழமை (13) முன்னர் இலங்கையை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டுள்ள மேலும் 20000 மெற்றிக் தொன் அரிசி நத்தார் பண்டிகைக்கு முன்னதாக கொழும்பை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுவதாக அரிசி இறக்குமதியாளர்கள் குறிப்பிடுகின்றனர். இறக்குமதி செய்யப்படும் அரிசி கையிருப்பில் நாடு உட்பட பல்வேறு வகையான அரிசிகள் உள்ளடங்குவதாக இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர்.

## 18 இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் டிசெம்பர் மூன்றாம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்தப் 18 மீனவர்களும் நீரியல் வளத்திணைக்களகத்திரால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். வழக்குத்தவணைக்காக அவர்கள் அனைவரும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இந்தப் 18 மீனவர்களுக்கு எதிராகவும் மூன்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் தலா ஆறு மாத சிறைத் தண்டனை வீதம் 18 மாதங்கள் தண்டனை விதித்து அதை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்தார்.

அவர்கள் பயணித்த இழுவைப் படகு ஓட்டிக்கு, தெரிந்தும் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்து மீறிய காரணத்துக்காக மேலும் 6 மாத கால சிறைத் தண்டனை விதித்து நிபந்தனை அடிப்படையில் விடுவித்தார் நீதிவான்.

## மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிட்டு நேற்று கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாட்டில் நிலவும் மனித உரிமைகள்சார் கரிசனைகளை வெளிப்படுத்தி இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இப்போராட்டத்தில் கலந்துகொண்டோர் 'பயங்கரவாதத்தடைச்சட்டத்தை நீக்கு', 'நிகழ்நிலைக்காப்புச் சட்டத்தை நீக்கு', 'உயிர் வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்து', 'அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்', 'வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் நீதியை நிலைநாட்டு', 'உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டோருக்கு நீதியை வழங்கு', 'கோட்டா – ரணில் ஆளும்தரப்பால் கொண்டுவரப்பட்ட அடக்குமுறைச்சட்டங்களை நீக்கு', 'பால்புதுமையின சமூகத்தின் உரிமைகளை உறுதிப்படுத்து' எனும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்றையதினம் வடக்கு, கிழக்கின் பல மாவட்டங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கப் பிரதிநிதிகள் தலைமையில் பாரிய கவனயீர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்ட நிலையில் கொழும்பிலும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் பொதுசன நூலக முன்றலில் இடம்பெற்ற போராட்டத்தில், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சிவில் அமைப்பினர், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, வவுனியா கந்தசாமி ஆலயத்திற்கு முன்பாக ஆரம்பமாகிய உறவுகளின் பேரணி பழையபேருந்து நிலையப் பகுதியில் நிறைவடைந்தது. ஆர்ப்பாட்டத்தின் பின்னர் கருத்து தெரிவித்த போராட்டக்காரர்கள், அனைத்துலகமும் ஈழத் தமிழர்களை மனிதர்களாகப் பார்ப்பதில்லை என்று கருத்துத் தெரிவித்தனர்.

''சர்வதேச நீதி கிடைக்குமா என்ற கோள்வியோடு இந்ததினத்தில் நாம் போராடிவருகிறோம். உள்நாட்டுப்

தொடர்ச்சி 9ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# சர்வதேசமே நீதியைத் தா

## உறவுகள் முல்லைத்தீவில் விண்ணதிரக் குரல்

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 10.30 மணியளவில் குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

சர்வதேசமனித உரிமைகள் தினத்தை முன்னிறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கவனவீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அவ்வகையில் இலங்கை அரசிடம் நீதி கோரியபோதும், தீர்வுகள் கிடைக்காத நிலையில் தற்போது சர்வதேசத்திடம் நீதி கோரி போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், இதுவரை தீர்வு கிடைக்காததால் சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டத்தின் போது வலிந்து காணாமல் போனோருக்கு மரணச் சான்றிதழ் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், சர்வதேசமே நீதியைத் தா போன்ற பல்வேறு கோசங்களையும் எழுப்பி போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தின் போது வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் என பலரும் கலந்து கொண்டனர்.















# சுற்றுலாவிகளின் வருகை எல்ல பகுதியில் அதிகரிப்பு

இலங்கையில் டிசெம்பர் மாதத்தின் முதல் 4 நாள்களில் 23,958 சுற்றுலாவிகள் வருகை தந்துள்ளனர் எனச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ரஷ்யாவில் இருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாதத்தில் ரஷ்யாவில் இருந்து 4,418 பேரும், இந்தியாவில் இருந்து 4,317 பேரும், பிரித்தானியாவில் இருந்து 1,592 பேரும் இலங்கைக்குச் வருகைதந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன அந்த வகையில் நாட்டில் பல்வேறு பாகங்களிலிருந்து எல்ல பகுதிக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகள் படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

எல்ல பகுதிக்கு அதிக சுற்றுலா பயணிகள் வருகை தருவதால் மாலை நேரங்களில் பிரதான வீதிகளில் வாகனங்கள் நகரவே முடியாத சூழல் காணப்படுகின்றன.

வருகை தந்துள்ள சுற்றுலாவிகள் பூங்கா, ராவணஎல்ல நீர்வீழ்ச்சி, நட்சத்திர ஹோட்டல்கள் என்பவற்றுக்கு அதிகம் செல்வதாகவும் இதனால் எல்லவில் வாடகை வாகன ஓட்டுநர்கள், சுற்றுலா வழிகாட்டிகள், ஹோட்டல் உரிமையாளர்கள், வர்த்தகர்கள், வணிகர்கள் ஆகியோர் மகிழ்ச்சியடைந்துள்ளளர் எனவும் தெரிவிக்கின்றனர்.



அதிக சுற்றுலா பயணிகள் சாகசங்கள் மற்றும் குதூகலம் நிறைந்த ஏராளமான விஷயங்களை அனுபவித்து மகிழ்கிறார்கள். இந்த பகுதியில் 9 வளைவுகள் கொண்ட பாலம் சுற்றுலா பயணிகளை பெரிதும் கவரும் அம்சமாகக் காணப்படுகின்றது.

# மட்டக்களப்பிலும் போராட்டம்

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டுவலிந்துகாணாமல்ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கம் நீதிகோரி மட்டக்களப்பு காந்திபூங்காவில் நேற்று (செவ்வாய்க்கிழமை) கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இ. சிறிநாத். ஞா.சிறிநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியேந்திரன் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் நடராசா உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது நாங்கள் கேட்பது இழப்பீட்டையோ, மரணச் சான்றிதழையோ அல்ல முறையான நீதியையே. எமது உரிமை ?, எமது எதிர்காலம் ? இப்போது, எமது உறவுகள் எங்கே, என பல வாசகங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.









# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பேச்சைவிட செயலே முக்கியம்

**எத்தனை சட்டங்களை உருவாக்கினாலும் எத்தனை நிறுவனங்களைத் தோற்றுவித்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துபவர்கள் உண்மையாக இல்லையெனில் அவற்றால்பயனில்லைஎன்றுதெரிவித்திருக்கின்றார்அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க. அது உண்மைதான். இலங்கையில் பல மிகச் சிறப்பான சட்டங்கள் உள்ளன. அவற்றில்பலபயன்படுத்தப்படுவதே இல்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற பல சட்டங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகின்றன.**

**”எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மக்களினால் வழங்கப்பட்ட அதிகாரம். அதன் ஊடாக மக்களுக்கு நீதி , நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும் என உண்மையாக உறுதி பூண வேண்டும். அவ்வாறின்றி எத்தனை நிறுவனங்கள் உருவாக்கினாலும் சட்டங்கள் இயற்றினாலும் பலனில்லை.**

**சட்டம் பயனற்றது என்று நான் கூறவில்லை. நிறுவனங்களை பலப்படுத்தத் தேவையில்லை என்று நான் கூறவில்லை.சட்டங்கள் போதுமானதாக இல்லாவிட்டால் மேலும் சட்டங்கள் இயற்றுவோம். நிறுவனங்கள் போதுமானதாக இல்லாவிட்டால் மேலும் நிறுவனங்களை உருவாக்குவோம்.ஆனால் எத்தனை சட்டங்கள் உருவாக்கினாலும் எத்தனை நிறுவனங்கள் அமைத்தாலும் அவற்றில் அதிகாரம் பெற்றுள்ளவர்கள் தமக்குறிய பொறுப்புகளை நிறைவேற்றத் தயாரில்லை என்றால் அவற்றினால் பயனில்லை. பலர் தமது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ததையே நான் எனது காலப்பகுதியில் கண்டுள்ளேன்” என்று அரசுத் தலைவர் தெரிவித்துள்ளார்.**

**இலஞ்சம், ஊழல் ஒழிப்புத் தொடர்பாக ஆற்றிய உரையின்போதுஅவர்இதனைத்தெரிவித்திருக்கின்றார்.இந்த விடயத்தில்மட்டுமல்ல இன்னும்பலவிடயங்களிலு–மே இந்த நிலை தொடர்கின்றது. அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்கள் இன்னமும் மாகாணங்களுக்கு வழங்கப்படவில்லை. இதற்கு முன்னர் இருந்த அரசுத் தலைவர்களால் மட்டுமல்ல இப்போது இருக்கும் அரசுத் தலைவராலும் அந்த அதிகாரங்கள் இதுவரையில் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டபோதும் அது இன்னும் நீக்கப்படவில்லை. சிறுவர்கள், பெண்கள் தொடர்பான சட்டங்கள் பல தொட்டுக்கூடப் பார்க்கப்படாத நிலையில் சட்டப் புத்தகங்களிலேயே உறங்குகின்றன.**

**இவை பற்றியெல்லாம் கடந்த காலங்களிலும் ஆட்சியாளர்கள் பேசியிருக்கின்றார்கள். அவை திருத்தப்படவேண்டும் என்று பேசியிருக்கின்றார்கள். பேருரைகளை ஆற்றியிருக்கின்றார்கள். ஆனால், அவை எதுவும் நடைமுறைப்படுத்தப்பட்டதில்லை. இப்போது புதிய அரசுத் தலைவரும் அதனையே சொல்கிறார். என்னால் தலைமைத்துவத்தை மட்டுமே வழங்க முடியும் நடைமுறைப்படுத்துவதை அதிகாரிகளும் ஏனையவர்களும்தான் மேற்கொள்ளவேண்டும், அவர்கள் அதை நேர்மையாகச் செய்யவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.**

**சரியானதலைமைத்துவம்வழங்கப்பட்டால்நேர்மையான ஆட்சி இடம்பெறுவதை உறுதிப்படுத்த முடியும். பேசுவதால் மட்டும் பயனில்லை, அதை நடைமுறைப்படுத்துவதற்கான வழிவகைகளையும் செயற்படுத்த வேண்டியது அவசியம் என்பதைத்தான் அது உணர்த்துகின்றது. எனவே இன்றைய அரசுத் தலைவரும் பேசுவதைவிட செயலில் காட்டுவதே மிக முக்கியமானது.**

# எல்லோரும் மாறுவோம்!

### இன்சுவை

*நாம் பிறக்கும் போது வெறுங்கையுடன் தான் பிறக்கிறோம். இந்த உலகை விட்டு நீங்கும் போதும் எதையும் எடுத்துச் செல்வதில்லை. கோடிகளில் புரண்டாலும் எதுவும் உடன் வராது. ஆகவே வாழ்கின்ற நாள் வரை மகிழ்வாய், நிறைவாய் வாழ்ந்து விட்டுப் போகலாமே! கூடுமான வரை சக உயிர்களிடம் அன்பையும், அக்கறையையும் வெளிப்படுத்தலாமே! நாம் நடந்து போகும் பாதையெங்கும் மகிழ்ச்சிப் பூக்களைத்தூவிக் கொண்டே சென்றால், அந்த நறுமணம் பல காத தூரம் வீசும்.*

*அலெக்சாண்டர், தான் இறப்பதற்கு முன் தன் கடைசி விருப்பங்களைக் கூறினார்.*

*முதலாவதுவிருப்பம்:என்சவப்பெட்டியை மருத்துவர்கள்தான் சுமக்கவேண்டும். எந்த மருத்துவராலும் யாரையும் காப்பாற்ற முடியாதுஎன்பதைத் தெரிவிக்கமருத்துவர்கள் சவப்பெட்டியை எடுத்துச் செல்லவேண்டும்.*

*இரண்டாவது விருப்பம்: கல்லறைக்குச் செல்லும் வழியில் தங்கம், வெள்ளி மற்றும் பிற விலைமதிப்பற்ற கற்களை வீச வேண்டும். எவ்வளவு செல்வத்தைக் குவித்தாலும், இந்த உலகத்தை விட்டு வெளியேறும்போது ஒரு துகள்கூட நம்முடன் வராது என்பதை உணர்த்த வேண்டும்.*

*மூன்றாவது விருப்பம்: சவப்பெட்டிக்கு வெளியே என் இரண்டு கைகளும் தொங்க விடப்படவேண்டும். சவப்பெட்டிக்கு வெளியே என் கைகள் தொங்குவதால் நான் வெறும் கையுடன் செல்கிறேன் என்பதை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.*

*மண்ணாசை கொண்டு, குருதி ஆறுகளை ஓட விட்ட மாவீரன்அலெக்சாண்டர் தன் 32-ஆவது வயதில் உயிரிழந்தார்.*

*வாழ்க்கையின் நிலையாமையைப் புரிந்து கொண்டவர்கள் நல்வினை ஆற்றுவார்கள். அவர்கள் கண்களில் அருளும், கனிவும், கருணையும் சுரக்கும்.*

*ஒருவழிப்போக்கர்ஒருசூஃபியைச்சந்திக்க அவர் வீட்டுக்கு வந்தார். சூஃபியினுடைய வீட்டைப் பார்த்தவருக்குப் பேரதிர்ச்சி. மிக மிக எளிமையான அந்த அறையில் எந்த இருக்கையும் காணப்படவில்லை. ஒரு பாய், ஒரு மண்ணெண்ணெய் விளக்கு ஆகியவை மட்டுமே இருந்தன.*

*வழிப்போக்கர் கேட்டார், “உங்களுடைய ஆசனங்கள் எங்கே? ”*

*சூஃபி அந்த நபரிடம், “ உங்களுடைய ஆசனம் எங்கே?” என்று கேட்டார்.*

*அதற்கு அந்த மனிதர், “என்னுடையனவா? நான் இங்கே ஒரு வழிப்போக்கன் மட்டுமே, ஒரு பார்வையாளர் தான்” என்றார். சூஃபி, “நானும் தான்” என்றார்.*

*ஆக நாம் அனைவரும் ஒரு சில காலம் மட்டுமே இந்த பூமியில் தங்கிச் செல்லப் போகிறோம். நிரந்தரமானவர் ஒருவரும் இல்லை. இதைப் புரிந்து கொண்டு செயல்படுபவர்கள் இந்த உலகின் அச்சாணி எனலாம். பணம் சார்ந்த இந்த உலகில், மனிதத்தன்மையோடு இயங்கும் நல்ல உள்ளங்களைக் காணும்போது, மனதில் மகிழ்ச்சி அலைகள் பொங்குகின்றன. இதயம் ஈரமாகிறது; மனம் அவர்களை வாழ்த்துகிறது. வெளிச்சத்துக்கு வராத எத்தனையோதர்மச்செயல்கள்நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு சில மட்டுமே ஊடக வெளிச்சம் பெறுகின்றன.*

*முகநூலில் வந்த சில காணொலிகள் மண்ணுலக தெய்வங்களைப் படம்பிடித்துக் காட்டின. அது குழந்தைகளுக்கான ஆயத்த உடைகள் மற்றும் பொம்மைகள் கடை. புதிதாக திறக்கப்பட உள்ளது. ரிப்பன் கட்டிவைத்திருந்தார்கள். பொதுவாக, கடை திறப்புஎன்றால்நடிகர், நடிகையர்களைத்தான் அழைக்கிறார்கள். அதற்குப் பல லட்சங்கள் அவர்களுக்குத் தர வேண்டும். பிரபலங்களை வைத்துத் திறந்தால், கடைக்கு அதுவே விளம்பரமாகிவிடும் என்று நினைக்கிறார்கள். நான் பார்த்த காணொலியில் அப்படி எந்த பிரபலமும் தென்படவில்லை. ஓர் ஏழைப் பெண் கையில் ஒரு குழந்தையுடனும், இடுப்பில் ஒரு குழந்தையுடனும் கடை முன் நின்றாள். அவள் ரிப்பனை வெட்டி கடையைத் திறந்தாள். உடன் கடை முதலாளி மட்டும் நின்றிருந்தார். அப்பெண்ணை அவர் உள்ளேஅழைத்துப் போனார். குழந்தைகளுக்கு ஆளுக்கு ஒரு பொம்மையை எடுத்துக் கொடுத்தார். அச்சிறுவனின் முகத்தில் தோன்றிய பிரகாசம் நூறு சூரியன்களின் ஒளிக்கு இணையானது. பின் ஆயத்த ஆடைகளைக் கொடுத்து குழந்தைகளுக்கு அணிந்துவிடச் சொன்னார். புதிய உடைகளில் அக்குழந்தைகள் அழகாக மாறினர். பின் மூன்று பெரிய பைகள் நிரம்பும் அளவுக்கு உடைகளைக் கொடுத்து அனுப்பினார். அந்தப் பெண் அவரை விழுந்து வணங்கி விட்டு, கை நிறைய பைகளுடனும், மனம் நிறைய மகிழ்ச்சியுடனும் சென்றதைப் பார்த்த பொழுது, என்னுள் தோன்றிய உணர்வுகளை எழுத்தில் வடிக்கத் தெரியவில்லை.*

*இதுபோல் நிறைய நல்ல உள்ளங்கள் இருக்கின்றன. நமக்குத் தெரிவதில்லை. இன்னொரு செய்தி. ஒரு சிறுவன் சாலையில் இருந்த குழியில் தவறி விழுந்து இறந்து விட்டான். அழுது, அரற்றி தன்னைத் தேற்றிக் கொண்ட அவன் தந்தை என்ன செய்தார் தெரியுமா? மூட்டை சிமெண்ட் மற்றும் மண்வெட்டி சகிதம் கிளம்பி தன் கண்ணில் பட்ட அத்தனை குழிகளையும் அடைத்தார். எவ்வளவு மகத்தான சேவை இது! தன் மகனைப் போல் இன்னொரு உயிர் பறிபோய் விடக்கூடாது என்ற நல்லெண்ணம்.*

*இதேபோல வேறு சில மனிதநேயத்தைப் பறைசாற்றும் சில காணொலிகளைக் கண்டேன். ஒரு பெண் தன் குழந்தையுடன் நடந்து போய்க் கொண்டிருக்கிறாள். ஒரு கடையில் குழந்தைகள் சைக்கிள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. அந்த சைக்கிள் வேண்டும் என அக்குழந்தை அடம்பிடிக்கிறது; அழுகிறது; அங்கிருந்து நகர மறுக்கிறது. தாய் அதை இழுத்துக்கொண்டு போகிறாள். ஓர் இளைஞன் இதை கவனித்துக் கொண்டிருக்கிறான். உடனே போய் அந்த சைக்கிளை விலைக்கு வாங்கி ஓடிப் போய் அந்தச் சிறுவனிடம் கொடுக்கிறான். இருவர் முகத்திலும் மலர்ச்சி.*

*இன்னொரு காணொலி. குப்பைகள் நிறைந்து கிடக்கும் இடம். அங்கே ஓர் கந்தைத் துணியில் ஒரு குழந்தை கிடத்துப்பட்டுள்ளது. அருகே அதன் தாய் அமர்ந்திருக்கிறாள். ஓர் இளைஞன் நாடாக்கட்டில் ஒன்றை வாங்கி வந்து அங்கே போட்டு அதன் மீது அந்தக் குழந்தையைப் படுக்க வைக்கிறான். கலவரமும், மகிழ்ச்சியும் கலந்த அந்தத் தாயின் முகம் என் நினைவில் தங்கிவிட்டது.*

*காவலர்கள் இயலாதவர்களுக்கு உணவு வாங்கித் தருகிறார்கள். இளைஞர்கள் அழுக்கு உடையும், சிடுக்கு பிடித்த தலையும் கொண்டு திரியும் ஆதரவற்றவர்களைக் கண்டால், அவர்களைக் குளிப்பாட்டி, தலைமுடியை வெட்டி சீராக்கி, புதிய உடைகளை அணிவித்து, அவர்களுக்கு உணவு தந்து ஆளையே அடையாளம் தெரியாமல் மாற்றி விடுகிறார்கள். அழுக்கானவர்களைப் பார்த்து அவர்கள் அருவருப்புக் கொள்ளவில்லை. மாறாக, அவர்கள் மீது கழிவிரக்கம் கொள்கிறார்கள். இந்த சமுதாயத்துக்கு அவர்களால் முடிந்த சேவையைச் செய்கிறார்கள்.*

*வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலார் போல, இவர்களும் சக மனிதர்களின் துயர் கண்டு துடித்துப் போகிறார்கள். சேவை செய்வது அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இத்தகைய சிறு*

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# எல்லோரும் மாறுவோம்!

4ம் பக்கத் தொடர்ச்சி...........

சிறு சந்தோஷங்கள் போதும், நம் வாழ்க்கையை அழகாக்க என அவர்கள் நினைக்கிறார்கள்.

வறியார்க்கென்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து - என்கிறது வள்ளுவம்.

ஒரு சிலர் சமுதாயம் என்னும் தூணைத் தாங்கிப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு தேரை இழுப்பதற்கு எத்தனை கைகள் தேவைப்படுகின்றன? ஒருவராலும் அதைத் தனியாக இழுக்க முடியாது. பாரத்தைப் பகிர்ந்து கொள்வதால் செயல் எளிதாகிறது. அதேபோல நாம் ஒவ்வொருவரும் நம்மால் முடிந்த சமுதாயப் பணிகளைச் செய்தால், சமுதாயம் மேன்மையுறும்.

பலரும் தங்கள் இல்லத் திருமணம் மற்றும் சுப நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வோர் அளிக்கும் பரிசுப்பொருள் அல்லது பணம் (மொய்ப்பணம்) குறித்த விவரங்களை ஒரு நோட்டுப் புத்தகத்தில் குறித்து வைத்துக் கொள்கிறார்கள். பரிசுப் பொருட்களைத் தருபவர்கள், முன்னெச்சரிக்கையாக விலையைக் கிழித்து விடுவார்கள் அல்லது மறைத்து விடுவார்கள். அப்பொருள் சுமாராக என்ன விலை இருக்கும் என இவர்கள் ஊகிப்பார்கள். அவர்கள் வீட்டு நிகழ்வுக்கு அதேயளவு பணம் அல்லது பரிசு தந்து கணக்கை நேர் செய்துவிடுவார்கள். சில வருடங்களுக்கு முன்பு ரூ.500 என்பது பெரிய தொகை. ஆனால் இவர்கள் இப்போது அதே ரூ. 500ஐ திரும்ப அன்பளிப்பாகத் தருகிறார்கள். இப்படி இருப்பவர்கள் எப்படி அள்ளிக் கொடுப்பார்கள்?

நம் குறுகிய கண்ணோட்டம் மாற வேண்டும். நம்மிடம் அதிகமாக இருப்பதையாவது பிறருக்குத் தர மனம் வரவேண்டும். நெம்புகோல் போல நம் ஒவ்வொருவரின் உதவியும், முயற்சியும், கொடையும், கருணையும் பல இல்லங்களில் இருளைப் போக்கும்.

பெரிய கூடையை இறக்கி வைப்பவர்கள், அதை மீண்டும் தலை மேல் வைக்க, யாரையாவது கொஞ்சம் தூக்கி விடச் சொல்வார்கள். நாம் அதிகம் சிரமப்படாமல் கொஞ்சம் கை கொடுத்தால், அவர்கள் சுமந்து கொள்வார்கள். அதேபோல் நாம் ஒவ்வொருவரும் கொஞ்சம் தூக்கி விட்டால், கைகொடுத்தால், பலரின் வாழ்வு ஏற்றம் பெறும்.

# இளையோரின் உரிமைகளை வெல்ல மன்னாரில் விழிப்புணர்வு ஊர்வலம்

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி நேற்றைய தினம் (செவ்வாய்க்கிழமை) காலை 11 மணியளவில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) ஏற்பாட்டில் இளையோர்களை ஒன்றிணைத்து விழிப்புணர்வு ஊர்வலம் இடம் பெற்றது.

மன்னார் பஜார் பகுதியில் இருந்து குறித்த ஊர்வலம் ஆரம்பமானது.

இளையோர்களின்உரிமைகளைவென்றெடுக்கும் வகையில் குரல் கொடுக்கும் முகமாக குறித்த ஊர்வலம் இடம் பெற்றது.

மன்னார் பஜார் பகுதியில் மக்களை கவனவீர்க்கும் வகையில் மேற்கத்தேய இசை வாத்தியம் முன்னெடுக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்துவிழிப்புணர்வுகவனவீர்ப்பு ஊர்வலம் இடம் பெற்றது.

மன்னார் பஜார் பகுதியில் இருந்து குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமாகி மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாக சென்று மீண்டும் மன்னார் பஸ் நிலையத்தை வந்தடைந்தது.

மன்னார்சமூகபொருளாதாரமேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் யாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள்,சிவில் சமூக பிரதிநிதிகள்,இளைஞர்,யுவதிகள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.








# நாம் கேட்பது வெறும் இழப்பீடல்ல முறையான நீதி விசாரணையே

## திருகோணமலையில் உறவுகள் நேற்றுப் போராட்டம்







(ஹஸ்பர்)

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று (செவ்வாய்க்கிழமை) திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் ஊடாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்திய காரியாலயம் முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

நாங்கள் உண்மை மற்றும் நீதிக்காக தொடர்ந்தும் போராடுகிறோம், நாங்கள் கேட்பது இழப்பீடையோ மரண சான்றிதழையோ அல்ல முறையான நீதி விசாரனையே போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் ஏந்தியவாறு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

வேண்டாம் வேண்டாம் ஓஎம்பி வேண்டாம், மனித உரிமைகள் இல்லாத நேரத்தில் மனித உரிமைகள் தினம் எதற்கு? சர்வதேச நீதி வேண்டும், வெள்ளைவானில் கடத்திய எங்கள் பிள்ளைகள் எங்கே? வேலைக்கு சென்ற - பாடசாலை சென்ற - எங்கள் பிள்ளைகள் எங்கே? போன்ற கோசங்களையும் இதன் போது எழுப்பினர்.

உங்கள் இரானுவத்தை நம்பி ஒப்படைத்த எங்கள் பிள்ளைகள் எப்படி காணாமல் போனார்கள்?? போன்ற கேள்வியையும் வாசகத்தில் உள்ளடக்கியிருந்தனர்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அந்தச் சங்கத்தின் தலைவி செபஸ்டியன் தேவி -

கடந்த 15 வருட காலமாக ஏமாற்றப்பட்டு வருகிறோம். இந்த மனித உரிமைகள் தினம் ஏதற்கு? இந்த அரசாங்கம் வருகையின் பின்னும் புலனாய்வாளர்களால் அச்சுறுத்தப்பட்டு வருகிறோம். ஏன் இதனை அவர்கள் செய்கிறார்கள். சர்வதேச நீதிப் பொறி முறை தான் எமக்குத் தேவை. உள்நாட்டு பொறிமுறை என்பது வெறும் கண்துடைப்பு. எனவே தீர்வைப் பெற்றுத் தரும் வரைக்கும் எங்கள் போராட்டம் தொடரும். இந்த அரசாங்கம் அவர் சார்ந்த சமூகத்தையே பார்க்கிறார் தமிழ் மக்களுக்கான எந்தவித தீர்வும் இல்லை. - என்றார்.

இதில் சுமார் நூற்றுக்கும் அதிகமான காணாமல் போனவர்களின் உறவினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கரணவாய் வெற்றுக் காணியிலிருந்து எரிந்த நிலையில் பெண்ணின் சடலம்

யாழ்ப்பாணத்தில் வெற்றுக் காணி ஒன்றில் இருந்து பெண்ணொருவரின் சடலம் எரியுண்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

காரணவாய் பகுதியை சேர்ந்த 48 வயதுடைய பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இறந்த பெண்ணின் வீட்டுக்கு அருகில் உள்ள பனங்காணி ஒன்றில் இருந்தே சடலம் எரியுண்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வேலையற்ற பட்டதாரிகள் பலர் அம்பாறை எம்பியுடன் சந்திப்பு

(றிபாஸ்)

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிருக்குமிடையிலான சந்திப்பொன்று திங்கட்கிழமை ஒலுவில் க்ரீன் வில்லா வளாகத்தில் இடம்பெற்றது.

இதன் போது பட்டதாரிகள், அரச தொழில் வாய்ப்பின்றி எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அவ்வமைப்பால் தெளிவு படுத்தப்பட்டது.

இதன் போது வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பிலான தகவல்கள், அரச தொழில் தொடர்பான தகவல்கள் மற்றும் பட்டதாரிகளுக்கான மாற்று தொழில்வழிகாட்டல்கள் தொடர்பிலும் முழுமையான தகவல்களை கேட்டறிந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், இது விடயம் தொடர்பில் பட்டதாரிகளுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கான சகல முஸ்தீபுகளையும் தான் மேற்கொள்வதாக தெரிவித்திருந்தார்.





காலைக்கதிர் Kalaikkathir

# வர்த்தக விளம்பரங்களுக்காக கல்முனையில் டிஜிற்றல் திரை

(அஸ்லம் மௌலானா)

கல்முனை மாநகர வர்த்தக நிலையங்களின் வர்த்தக விளம்பரங்களை காட்சிப்படுத்துவதற்காக கல்முனை மாநகர சபையால் அமைக்கப்பட்ட டிஜிற்றல் திரை நேற்று (செவ்வாய்க்கிழமை) சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாநகர சபையின் கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் மற்றும் கல்முனை வர்த்தக சங்கத்தின் தலைவர் கே.எம். சித்தீக் உட்பட ஏனைய வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இந்த டிஜிற்றல் திரையில் வர்த்தக நிலையங்கள் தமது வர்த்தக விளம்பரங்களை காணொளிகளாகவும் புகைப்படங்களாகவும் காட்சிப்படுத்த முடியும் எனவும் இதற்காக நாளாந்த, வாராந்த, மாதாந்த, வருடாந்த பெக்கேஜ் அடிப்படையில் கல்முனை மாநகர சபைக்கு கட்டணங்களை செலுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.






# மலரும் மொட்டுகள் நிகழ்ச்சி நேரலையில்

(சியாஜ்)

கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் மலரும் மொட்டுகள் எனும் முகநூல் நேரலை சிறுவர் நிகழ்ச்சி மூன்று நாள்கள் நிறைவில் பத்தாயிரம் பார்வையாளர்களையும் தாண்டி சாதனை படைத்துள்ளது.

கற்பிட்டி வரலாற்றில் முதன் முறையாக வாராந்த முகநூல் நேரலை நிகழ்வாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மலரும் மொட்டுகள் சிறுவர் நிகழ்ச்சி சகல தரப்பினரையும் கவர்ந்துள்ளது.

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் இரு சிறுவர்கள் தமது திறமைகள் மற்றும் ஆற்றல்களை வெளிக்கொண்டு வரும் வண்ணமாக கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது.



மேற்படி மலரும் மொட்டுகள் முகநூல் நேரலைநிகழ்ச்சியை மன்றத்தின் பொருளாளர் கவிதாயினி ஏ.எச்.எப் பர்வின் தொகுத்து வழங்குவதுடன் நேரலையை கற்பிட்டியின் முகநூல் ஊடகவியலாளர் றிஸ்வி ஹுசைன் மேற்கொள்வதுடன் நெறிப்படுத்தல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை மன்றத்தின் தலைவர் எஸ்.எம் அருஸ், உப தலைவர் எம்.எம்.எம் நவ்ப், செயலாளர் எம்.எச்.எம் சியாஜ் மற்றும் நிர்வாக உறுப்பினர்களான ஏ.ஆர்.எம் அஸ்கர், எஸ் சுப்ரமணியம் வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதன் போது மாவடிப்பள்ளி கல்விச் சமூகமும் பெற்றோரும் ஆசிரியர்களும் மாணவர்களும் இவ்வாறான உதவும் கரங்களுக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.



# 3.5 கிலோ என்.சி. போதைப்பொருளுடன் பொகவந்தலாவையில் ஒருவர் கைது

(.கிஷாந்தன்)

என்.சி எனும் போதைப்பொருளை விற்பனை செய்த சந்தேக நபர் ஒருவர் 3 டி கிலோ என்.சி போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு பாதுகாப்பாக கொண்டுவரப்பட்ட என்.சி என்ற போதைப்பொருளை விற்பனை செய்த சந்தேகத்தின் பேரில் சந்தேகநபர் ஒருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார் என பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

சுகாதார அமைச்சால் தடைசெய்யப்பட்ட என்.சி என்ற போதைப்பொருள் சிறிய பொதிகளில் பொதியிடப்பட்டு தோட்டங்களில் உள்ள இளைஞர்களுக்கு ஒரு பக்கட் 500 ரூபா முதல் 1000 ரூபா என்ற அடிப்படையில் விற்கப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் பொகவந்தலாவ பிரிட்வேல் தோட்டத்தில் வசிப்பவர் எனவும் சந்தேகநபரின் வீட்டை சோதனையிட்ட போது வீட்டில் மிகவும் சூட்சபமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 3 டி கிலோகிராம் என்.சி போதைப்பொருள்கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொகவந்தலாவ பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## மாவடிப்பள்ளியில்

# அஷ்ரப் மகா வித்தி. மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

கல்முனை கல்வி வலய மாவடிப்பள்ளி கமு/கமு/அல்- அஷ்ரப் மகா வித்தியாலயத்தில் பெற்றோர்களை இழந்த மாணவர்களுக்கு கல்வியின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் புதிய தலைமுறை கழகத்தால் பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு மாவடிப்பள்ளி கமு ஃகமு ஃஅல்- அஷ்ரப் மகா வித்தியாலய அதிபர் ஏ.எல்.ரஜாப்தீன் தலைமையில் நடைபெற்றது.



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷரஃப் அவர்களின் ஆலோசனைக்கிணங்க புதிய தலைமுறை கழகத்தின் மாவடிப்பள்ளி செயற்பாட்டாளர்களால் பெற்றோர்களை இழந்த பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தொகுதி உபகரணங்கள் அதிபர்,ஆசிரியர்களிர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதி அதிபர், பகுதி தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயிற்சி ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திசங்கசெயலாளர் மற்றும் உறுப்பினர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.



## மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறிமுறையில் நம்பிக்கையில்லாத நிலையில் ஐ.நா. அனைத்துலக சாசனத்துக்கு அமைய ஐக்கிய நாடுகளின் அவையின் கீழ், சர்வதேசநீதிப் பொறிமுறையை நாடிநிற்கின்றோம். எங்களது உறவுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களே, அவர்கள் காணாமல் போனவர்கள் அல்லர்" என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அதேநேரம், முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் நடந்த போராட்டம் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நேற்றுக் காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

காணாமலாக்கப்பட்டவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், சர்வதேசமே நீதியைத் தா என்று போராட்டக்காரர்கள் குரல் எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் உறுப்பினர் துரைராசா ரவிகரனும் கலந்துகொண்டார்.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் ஏற்பாடு செய்த கவனயீர்ப்பு போராட்டம் நேற்றுக் காலை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் புகைப்படத்தோடு- கையில் மெழுகுவர்த்தி ஏந்தி அமைதியான முறையில் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

"மனித நேயமே இல்லாத இந்த நாட்டிலே மனித உரிமைகள் தினத்தை நினைவு கூறுவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை" எனப் போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார் தெரிவித்தனர்.

"காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளை மீட்க கடந்த 15 வருட காலங்களாக நாங்கள் வீதியில் நிற்கின்றோம். உலக நாடுகள் என்றாலும் சரி எமது நாடாக இருந்தாலும் சரி எங்களை வேடிக்கை பார்க்கின்றன. தீர்வு ஏதும் தரவில்லை" என்று அவர்கள் வேதனைப்பட்டனர்.

மட்டக்களப்பு காந்திபூங்காவிலும் உறவுகள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மருத்துவர் சிறிநாத். சிறிநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியேந்திரன் கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் நடராசா உட்படப் பலர் கலந்துக்கொண்டனர்.

திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் ஊடாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்திய காரியாலயம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

உங்கள் இராணுவத்தை நம்பி ஒப்படைத்த எங்கள் பிள்ளைகள் எப்படி காணாமல் போனார்கள்? என்று போராட்டக்காரர்கள் கேள்வி எழுப்பினர். கடந்த 15 வருட காலமாக ஏமாற்றப்பட்டு வருகிறோம். இந்த மனித உரிமைகள் தினம் எதற்கு? ஆட்சி மாறிய பின்பும் நாம் புலனாய்வாளர்களால் அச்சுறுத்தப்பட்டு வருகிறோம். ஏன் இதனை செய்கிறார்கள்? என் தெரிவித்தார்.

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்புக்குள் கூறுகின்றன. சம்பவம் தொடர்பில் மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவித்ததாவது:

வைத்தியசாலைக்குள் உள் நுழைந்தவர் பனிப்பாளரின் அறைக்குள் நுழைந்து தன்னை சேர் என அழைக்குமாறு கூறினார். நாடாளுமன்ற உறுப்பினர் என்றே அழைக்க முடியும் "சேர்" என்று அழைக்க முடியாது என வைத்தியசாலைப் பணிப்பாளராகத் தெரிவித்தேன்.

இருப்பினும் தகாத வார்த்தைகளால் பேசிய அருச்சுனா, என்னைப் பணிப்பாளர் பதவியில் இருந்து இடை நிறுத்துவேன் என்றும், நாடாளுமன்றத்திற்கு அழைத்துக் கேள்வி கேட்பேன் என்றும், வெளிநாட்டுக்கு தப்பி ஓடு என்றும், அச்சுறுத்தும் பாணியில் கூறினார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவிலே நாளாந்தம் 1500 பேர் வரை சிகிச்சை பெற்று வருகின்றனர். இவற்றைவிட தாதியர்கள் உத்தியோகத்தர், ஏனைய சிகிச்சை பெறும் நோயாளர்கள் என பல்லாயிரக்கணக்கானோர் உள்ளனர்.

இந்த வைத்தியசாலையின் செயற்பாடுகளை குழப்புவதற்கு யாரேனும் முயற்சித்தால் இனிமேல் அவர்கள் வாசலில் காவலாளிகளால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார்கள்.

வடக்கு பகுதியிலே 2200 பேர் வரை பணிபுரியும் மிகப்பெரும் வைத்தியசாலையின் சேவையினை தனி நபர்கள் யாரேனும் குழப்புவதற்கு முயற்சித்தால் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் - என்றார்.

வைத்தியசாலையில் காணப்படும் சுகாதாரத் தொண்டர்கள் பற்றாக்குறை தொடர்பாகச் செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர்.

கடந்தகாலங்களிலே வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளரால் மூன்று மாதங்கள் பயிற்சி ஒன்று வழங்கப்பட்டது. அதனை நிறைவு செய்து பணியாளர்களாகக் கடமை ஆற்ற விரும்புபவர்கள் அவர்களுடைய விருப்பத்தின் பேரில் இங்கு தமது பயிற்சி நெறியை மேற்கொண்டார்கள். அவர்கள் மேற்கொண்ட பயிற்சி நெறி தொடர்பிலே சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு அறிக்கைகளை சமர்ப்பித்திருக்கிறோம். அவர்களை நிரந்தரமாகப் பணியில் இணைத்துக்கொள்வது தொடர்பில் மேலிடம்தான் முடிவெடுக்க முடியும்

இத்தகைய விடயங்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கேட்கின்ற போது அவற்றை எம்மால் வழங்க முடியும். ஆனால் அவர்கள் அடாவடியில் ஈடுபடும் வகையிலோ, அச்சுறுத்தும் வகையிலோ அல்லது வைத்தியசாலையைக் குழப்பும் வகையிலோ செயல்பட்டால் நாங்கள் அவர்களை அனுமதிக்க முடியாது. ஏனென்றால் இது மக்களுக்கு சிகிச்சை வழங்கும் நிலையம் என்பதை அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும் - என்றார்.

## மீண்டும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று நினைக்கிறேன். அந்த ஒற்றுமை இல்லாமையினால் எமது தேசத்தில் பல மாற்றங்கள் உருவாகியுள்ளது. அது தொடர்ந்தால் இங்கு இனப்பிரச்சனை என்ற ஒன்று இல்லை என்ற நிலமை ஏற்பட்டுவிடும். எனவே, இனம் சார்ந்த விடுதலையினை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற வகையிலே நாம் ஒன்றிணைய வேண்டும். ஒன்றிணைந்தால் மக்கள் எங்களுடன் நிற்பார்கள்.

நாடாளுமன்றுக்குள்ளும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓர் அணியாகச் சேர்ந்து பொதுவிடயங்களில் ஒன்றாகக் குரல்கொடுக்கும் நிலையினை ஏற்படுத்தவேண்டும். அத்துடன் வடக்கு-கிழக்கில் முன்னர் ஒன்றாக இருந்த கட்சிகளை மீள ஒன்றிணைத்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாகச் செயற்படலாமா என்பது தொடர்பிலும் பேசிக்கொண்டிருக்கிறோம்.

அத்துடன் பெருவாரியான வாக்குகளைப் பெற்ற இந்த ஆளும்தரப்பின் ஜனாதிபதி பேசியபோது ஒரு குண்டுமணி கூட வெளியில் இருந்து இறக்கமாட்டோம் என்று சொல்லியிருந்தார். ஆனால் இன்று நிலைமை மாறி இறக்குமதி செய்யும் சூழல் வந்துள்ளது. சர்வதேச நாணய நிதிய விடயத்தில் எந்தவொரு மறுப்பும் தெரிவிக்காமல் இவர்கள் கையொப்பம் இட்டுள்ளனர்.

ஆளும்தரப்பு இப்படியே சென்றால் மீண்டும் வரிசையுகம் வரும் சந்தர்ப்பம் ஏற்படும். எனவே ஆளும்தரப்பு நிதானமாகச் செயற்படவேண்டும். இன்று சாதாரண மக்கள்கூட தேங்காய் வாங்க முடியாத நிலமை ஏற்பட்டுள்ளது. ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் சூழலை மாற்றவேண்டும் - என்றார். (100)

## 6 மாதங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்படும் என அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் ஆளும்தரப்பைப் பொறுப்பேற்றபோது இலங்கை மின்சாரசபையால் மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்தில் பெரும் தொகை செலவிடப்பட்டிருந்தது. எனவே தற்போது மின் கட்டணத்தை அதிகரிக்காமல் பேணுவதற்கான நடவடிக்கைகளையே மின்சாரசபை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

எதிர்வரும் 6 மாதங்களுக்கு அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே மின்கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொண்டு மக்களுக்கு நிவாரணத்தை வழங்குவோம். அதேவேளை மின்சாரசபை ஊழியர்களுக்கு எவ்வித விசேட கொடுப்பனவையும் வழங்காமலிருப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின்கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைக்க முடியும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம். கடந்த ஆளும்தரப்பால் மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பணம் தொடர்பான தரவினை அடிப்படையாகக் கொண்டே நாம் அந்த கருத்தினை முன்வைத்தோம் என்றார்.

# வடமேல் முஸ்லிம் பாடசாலைகள் டிசெம்பரில் 4 நாள்கள் நடக்கும்

(சியாஜ்)

காலநிலையில் ஏற்பட்ட திடீர் மாற்றம் காரணமாக நவம்பர் 27, 28,29 மற்றும் டிசம்பர் 02 ஆகிய தினங்களில் விடுமுறை வழங்கப்பட்ட வடமேல் மாகாண முஸ்லிம் பாடசாலைகள் எதிர்வரும் டிசெம்பர் 16, 17, 18 மற்றும் 19 ஆகிய தினங்களில் மீண்டும் நடாத்தப்படும்.என வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

2024 நவம்பர் 27 அன்று பாடசாலை நடாத்தப்பட்டிருப்பின், 2024 டிசம்பர்16, 17, 18 ஆகிய தினங்களில் மாத்திரம் பாடசாலை நடாத்தப்படும் எனவும் வடமேல் மாகாண கல்வித்திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது.

# மே.சைக்கிளின் பின்னால் இருந்த நபர் தவறி வீழ்ந்து வாகனத்தில் நசிந்து சாவு

## விபத்தை ஏற்படுத்தியோர் தப்பியோட்டம்

(சியாஜ்)

பாலாவியிலிருந்து கற்பிட்டி நோக்கி தந்தையும் மகனும் மோட்டார் சைக்கிளில் பயணித்தவேளை பின்னால் அமர்ந்திருந்த மகன் தவறுதலாக மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே வீழ்ந்துள்ள நிலையில் பின்னால் வந்த வாகனம் ஏறி அந்த இடத்திலேயே உயிரிழந்தார். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தில் பயணித்தவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த விபத்து நுரைச்சோலை ஆண்டாங்கன்னி பகுதியில் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. இவ்வாறு உயிரிழந்த இளைஞர் கற்பிட்டி குறிஞ்சிப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 23 வயதுடையவரென பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அரையில் வைக்கப்பட்டுள்ளதுடன் தந்தை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்ற வாகனம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக நுரைச்சோலைப் பொலிஸார் இதன்போது தெரிவித்துள்ளனர்.

# மணிக்கூட்டு கோபுரம் மூதூரில் செயலிழப்பு

(நௌபர்)

திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மூதூர் புளியடிச்சந்தியில் அமையப்பெற்றுள்ள மணிக்கூட்டுக்கோபரத்திலுள்ள மணிக்கூடு நீண்டகாலமாக இயங்காது செயலிழந்துள்ளது. இதனைபுனரமைத்து இயங்கச்செய்ய உரிய பகுதியினர் கவனம் செலுத்தவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை



## இலங்கையர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடும்ப உறுப்பினர்களுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.

ஊழல் மோசடியாளர்களுக்கு எதிரான அமெரிக்காவின் முயற்சிகளுக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ஊழலுக்கு எதிரான தினம், மனித உரிமைகள் தினத்திற்கு இணையாக உலகம் முழுவதுமுள்ள ஊழல் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பான பொறுப்புக்கூறலை மேம்படுத்தும் வகையில் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அதற்கமைய, ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தால் அதிக விலைக்கு எயார்பஸ் விமானங்கள் கொள்வனவு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக இலஞ்சம் பெற்றதாக கபில குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சந்திரசேன மீதும்,

இலங்கை விமானப்படைக்கான மிக் விமான கொள்வனவில் ஊழலில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள உதயங்க வீரதுங்க மீதும் இந்தத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிக்கையூடாக குறிப்பிட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டுகளால் அமெரிக்க அரச ஒதுக்கீட்டு திணைக்கள சட்டத்தின் 7031(ஊ) சரத்தின்கீழ் குறித்த நபர்கள் அமெரிக்காவிற்குள் பிரவேசிக்க தகுதியற்றவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஊழல் குற்றச்சாட்டுகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள மேலும் 12 பேருக்கு எதிராகவும் அமெரிக்கா தடை விதித்துள்ளது.

## உணவுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

— உணவு பாதுகாப்புக்கு தேவையான உற்பத்திகள், களஞ்சியம், விநியோகம், தொகை மற்றும் சில்லறை வியாபாரம் ஆகிய விடயங்களுக்காக தனியார் துறையின் பங்களிப்பையும் பெற்றுக்கொண்டு பயனுள்ள வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல்,

என்பனவே இந்த குழுவின் முதன்மை பணிகளாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதிப்படுத்தும் அனைத்து நிறுவனங்களினதும் பங்களிப்புடன் தகவல் மற்றும் தரவுகளின் அடிப்படையில் அறிவியல் பகுப்பாய்வின் ஊடாக, கொள்கை ரீதியான வழிக்காட்டல்களை வழங்க, விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் ஆகியோரின் இணைத்தலைமைத்துவத்துடன் பிரதமரின் செயலாளர் உள்ளிட்ட உரிய அமைச்சுக்களின் செயலாளர்களின் பங்களிப்புடன் இந்த குழு நியமிக்கப்படவுள்ளது.

# திகாமடுல்ல வாக்குகளை மீண்டும் எண்ணவேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கேட்கிறார் அதாவுல்லா

(பாறுக் ஷிஹான்)

திகாமடுல்ல மாவட்ட பொதுத் தேர்தல் வாக்குகள் மீள எண்ணப்பட வேண்டும் என கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸிடம் கடந்த பொதுத் தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் புதிய ஜனநாயக முன்னணியில் போட்டியிட்டு தோல்வி அடைந்த தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாஉல்லாஹ் சட்டத்தரணி எம்.எம்.எம். முஅஸ்ஸம் சகிதம் நேற்று (செவ்வாய்க்கிழமை) மனு ஒன்றைக் கைளித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பாண்டிருப்பு பகுதியில் அமைந்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய அலுவலகத்திற்கு சென்று குறித்த மனுவை கையளித்துள்ளதுடன் குறித்த மனுவில் திகாமடுல்ல மாவட்டத்தின் தேர்தல் முடிவுகளை மீள எண்ணப்பட வேண்டும் என கோரி பல தரப்பினரிடம் தேசிய காங்கிரஸ் தலைவராக சென்று கடிதம் மூலமாகவும் நேரடியாகவும் மேற்கொண்ட முயற்சிகளுக்கு உரிய பதில்கள் கிடைக்கவில்லை என குறிப்பிட்டு தனது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்

இதே வேளை, நடந்து முடிந்த பொதுத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் அடங்கிய மனுவொன்றை தனக்கு தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாஉல்லாஹ் கைளித்ததாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் உறுதிப்படுத்தினார்.



மனுவை கையளித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர் -

நடந்து முடிந்த நாட ஜுளுமன்ற தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர்களின்உரிமைகள்திட்டமிடப்பட்ட வகையில் மறுக்கப்பட்டுள்ளன.மேலும் நாம் திகாமடுல்ல தேர்தல் மாவட்ட முடிவுகளை ஏற்று கொள்ளவில்லை. ஆனால் புதிய ஜனநாயக முன்னணி 88 வாக்குகளால் தோற்றதாக அறிவிக்கப்பட்டது. நாம் வாக்குகள் எண்ணப்பட வேண்டும் என்று கொழும்பில் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம். நீதிக்கான எமது போராட்டம் தொடரும். - என்றார்.

# சந்தையும் கண்காட்சியும் தோப்பூரில் நேற்று ஏற்பாடு

(நௌபர்)

மூதூர்பிரதேசசெயலகத்தினால்ஏற்பாடுகள் செய்யப்பட்ட வியாபாரசந்தையும்

கண்காட்சியும் நேற்றுக்காலை தோப்பூரில் நிருவாகக் கிராம சேவையாளர்

கே.எம்.ஜரூஸ் இனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது ,இக்கண்காட்சியும்

சந்தையும் நேற்று 4.30 மணிவரை நடைபெற்றது.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி

பிரிவுஎன்பனஇதனைஅமுலாக்குகின்றன.

உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல் சந்தைவாய்ப்புகளை பெற்றுத்தல்

என்பனவும் எதிர்பார்க்கப்படு கின்றன. இதில் அதிகளவான உற்பத்தியாளர்களும்

வியாபாரிகளும் பங்குகொண்டனர். அதிகளவானபொதுமக்களும்பொருட்களை கொள்வனவுசெய்ததை காணமுடிந்தது.



**வன்னியில்**

# தேர்தல் செலவு அறிக்கை 338 பேர் மட்டுமே தந்தனர்

வன்னி தேர்தல் மாவட்டத்தில் திங்கட்கிழமை வரை 338 பேர் தமது தேர்தல் செலவு அறிக்கையை சமர்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் சில தரப்புக்கள் பதிவுத் தபாலில் அவற்றை அனுப்பியுள்ளதால் கிடைக்கப் பெறுவதில் தாமதம் ஏற்ப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள், தங்களது தேர்தல் செலவு அறிக்கையை கடந்த 6ஆம் திகதி நள்ளிரவுக்கிடையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

அந்தவகையில், வன்னி தேர்தல் மாவட்டத்தில் 14 அரசியல் கட்சிகள் மற்றும் 20 சுயேச்சை குழுக்களை சேர்ந்தவர்கள் உட்பட 338 பேர் தமது தேர்தல் செலவு அறிக்கையை சமர்பித்துள்ளதாக மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் 23 அரசியல் கட்சிகளும் 25 சுயேச்சைக்குழுக்கள் என மொத்தமாக 48 தரப்புக்களை சேர்ந்த 432 பேரின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

அவர்களில் 5 சுயேச்சை குழுக்களினதும் 9 அரசியல் கட்சிகளையும் சேர்ந்த 14 தரப்புக்களின் செலவு அறிக்கை கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சில தரப்புக்கள் பதிவுத்தபாலில் செலவு அறிக்கையை அனுப்பிவைத்துள்ள நிலையில் அவை கிடைக்கப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(100)

# சிறுபோக பயிர் செய்கை குறித்து கிளிநொச்சியில் நேற்று கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட விவசாய குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. நடப்பாண்டுக்கான இறுதி மாவட்ட விவசாய குழுக் கூட்டம் இதுவாகும். கிளிநொச்சி மாவட்ட பதில் செயலர் முரளிதரன் தலைமையில், மாவட்ட செயலக மாநாடு மண்டபத்தில் காலை 9.30மணிக்கு கூட்டம் தொடங்கியது.

இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய துறைசார்ந்த பல்வேறு விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

கடந்த காலக் கூட்ட அறிக்கை, நீர்ப்பாசன குளங்களின் தற்போதைய நிலைமைகள், சிறுபோக பயிர்ச் செய்கை, துறைசார்ந்து தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக பயிர் செய்கையினை விரைவாக நிறைவுறுத்துவது தொடர்பிலும் எதிர்காலத்தில் இரணைமடுவின் கீழான சிறுபோக பயிர்ச் செய்கையினை முறையான பொறிமுறையின் கீழ் கொண்டு வருவதற்கான விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதோடு கல்மடுக்குளம் குடமுருட்டி குளம் ஆகியவற்றின் சிறுபோக பயிர்செய்கை தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

(113)

# புளியங்குளம் மயில்வாகனம் முன்பள்ளியின் கலை விழா

வவுனியா வடக்கு கல்வி வலத்தின் நெடுங்கேணிக் கோட்டத்திற்கு உட்பட்ட புளியங்குளம் மயில்வாகனம் முன்பள்ளியின் கலைவிழா கடந்த சனிக்கிழமை புளியங்குளம் ஆரம்பவித்தியாலய மண்டபத்தில் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் ம.முரளீதரன் கலந்துகொண்ட அதேவேளை முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர் இராஜேஸ்வரன், புளியங்குளம் ஆரம்பப்பாடசாலை அதிபர் சிவராசா,சமூக ஆர்வலர் மோசிபவன், முன்பள்ளி இணைப்பாளர் திருமதி சாந்தினி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்வுகளும் வெகு சிறப்பாக இடம்பெற்றன.



காலைக்கதிர் Kalaikkathir

# அமெ. இராஜாங்கத் திணைக்களத்தினது தீர்ப்பு ஏனைய மோசடியாளர்களுக்கும் சிறந்த பாடம்

## ஆளும்தரப்புப் கருத்து

மிக் விமானம் மற்றும் எயா பஸ் கொள்வனவுகளில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் உதயங்க வீரதுங்க, கபில சந்திரசேனவுக்கு வழங்கியுள்ள தீர்ப்பு ஏனைய மோசடியாளர்களுக்கும் சிறந்த பாடமாகும்.

இவற்றை அடிப்படையாயகக் கொண்டு சர்வதேசத்தின் உதவியுடன் ஊழலில் ஈடுபட்டோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று (செவ்வாய்கிழமை) இடம்பெற்ற போது அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த ஆட்சி காலங்களில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம்.

தாமதமாகும் மற்றும் கைவிடப்பட்ட விசாணைகளை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளின் போது ஊழல், மோசடிகளுடன் தொடர்புடையவர்களின் கூச்சல்களுக்கு நாம் கீழ்படியப் போவதில்லை.

எமக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா? நாம் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டோமா என நாமல் ராஜபக்ஷ போன்றோர் அண்மையில் கேள்வியெழுப்பியிருந்தனர்.

உதயங்க வீரதுங்க, கபில சந்திரசேன போன்றோருக்கு தற்போது கிடைத்துள்ள தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டும் இவர்களால் தற்போது கேள்வியெழுப்ப முடியுமல்லவா?

எவ்வாறிருப்பினும் போதுமான கால அவகாசத்தை எடுத்து விசாரணைகளை முறையாக முன்னெடுத்து சட்ட நடவடிக்கை எடுப்போம்.

மிக் விமான கொள்வனவு மற்றும் எயா பஸ் கொள்வனவு என்பவற்றில் இடம்பெற்ற மோசடிகளை அடிப்படையாகக் கொண்டே அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தால் இவர்களுக்கு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தநடவடிக்கைஇங்குமுன்னெடுக்கப்படும்விசாரணைகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கு இலகுவானதாக அமையும். இவற்றில் சர்வதேசத்தின் ஒத்துழைப்புக்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

அரசாங்கம் என்ற ரீதியில் இவர்களுக்கு எதிராக கடுமையாக சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். கடந்த காலங்களில் தம்மை நிரபராதிகள் என நிரூபிக்க முற்பட்டவர்களுக்கு அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தீர்ப்பு சிறந்த பாடமாகும். - என்றார்.

# இறந்த புலியின் உடல் விசுவமடுவில் மீட்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் விஸ்வமடு தொட்டியடி பகுதியில் அமைந்துள்ள கோவில் வளாகத்தில் அமைந்துள்ள மடப்பள்ளி பகுதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இறந்த நிலையில் புலி ஒன்றின் உடல் கோவில் பூசாரியால் இனங்காடப்பட்டதை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக சம்பவ இடத்துக்கு விரைந்த வன ஜீவராசிகள் திணைக் களத்தினர் இறந்த புலியின் உடலத்தை எடுத்துச் சென்றுள்ளனர். 113.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.12.2024இல் வெளியிடப்பெற்றது